# திஸ்ஸமஹாராம பிரதேச சபை

# அம்பாந்தோட்டை மாவட்டம்

-------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 4 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 26 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.2. மற்றும் 1.3.6 ஆம் பந்திகளில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ‘‘வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டிருந்த ரூபா 22,378,309 கூட்டுத்தொகையான 12 நிர்மாண வேலைகனின் பெறுமதி நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தது.

(ஆ) 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் பணத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 42,464,452 கூட்டுத்தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 1,161,289 கூட்டுத்தொகையான மூலதனச் செலவினம் செலவினங்களிலிருந்தும் ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதியிலிருந்தும் விடுபட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் திசெம்பர் மாதத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 197,754 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பரிந்துரையின் பிரகாரம் ஏலவிற்பனை செய்யப்பட்டு அகற்றப்பட்டிருந்த ரூபா 296,782 கூட்டுத்தொகையான சொத்துக்களின் கிரயத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குக் சொந்தமான டிராக்டர் டிரேலர் ஒன்றினதும் பஜரோ வண்டியினதும் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 8 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 1,973,998 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய கணக்குகள்**

---

(அ) முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 147,600 தொகையான நிலுவை வாகன வருமானம் மற்றும் ரூபா 51,870 தொகையான நிலுவை வாரச்சந்தை வருமானம் என்பவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 13,950 ஆன கடன் மீதியொன்றையும், வேலையை இடைநிறுத்தம் செய்யப்படதன் பேரில் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 118,098 ஆன கடன் மீதியொன்றையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

(அ) 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 40,647,702 கூட்டுத்தொகையான கடன் பணத்திலிருந்தும் அதற்குரிய ரூபா 42,464,452 வட்டி தொகையிலிருந்தும் ஒரு பகுதியை அல்லது பகுதியொன்றையோ செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடக் கணக்கிலிருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 408,822 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி அடிப்படையிலான வரித்தொகை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி என்பவற்றை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

---

ரூபா 2,500,000 பெறுமதியான காணியொன்றுக்கும் பெறுமதி குறிப்பிடப்படாத 17 காணிகளுக்குரிய உரித்துறுதிகள் / கையளிப்புக் கட்டளைகளும் ரூபா 208,649 தொகையான ஆரம்ப முற்பண மீதிகளுக்குரிய அட்டவணைகளும் ரூபா 17,639,881 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதிகளுக்குரிய காலப்பகுப்பாய்வும் ரூபா 177,857 கூட்டுத்தொகையான நானாவித வைப்புக்களில் வரவு மீதி உருவாவதற்குரிய காரணங்களும் சமர்ப்பிக்கப்படாதமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 214,330 தொகையும் சபை ஊழியர்களின் வருடாந்த சுற்றுலாவிற்காக ரூபா 80,000 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | காலாவதியான ரூபா 1,552,063 ஆன 449 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,033,766 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,608,934 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,575,168 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் சுய வருமானமீட்டலை விஞ்சி முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் போதும் மீண்டெழும் செலவினங்களில் கருத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்று தென்பட்டது.

(ஆ) சபைக்கு வருமான மானியம் கிடைக்கப்பெறாத போது சபையின் வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்வதற்கு எவ்வித வகையிலும் இயலுமை இல்லையென தென்பட்டது.

(இ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியத்தில் ரூபா 10,712,754 குறைவொன்று தென்பட்டதுடன் ஆண்டின் இறுதியில் அக்கணக்கின் மீதி ரூபா 11,304,323 ஆக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வீதவரிகள் மற்றும் வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 3,632,574 ஆக இருந்ததுடன், நீண்டகாலமாக வரி அறவிடப்படாத 20 வரி அலகுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 710,535 ஆன மீதிகளும் இந்நிலுவையில் உள்ளடங்கியிருந்தன. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் நிலுவை மீதி கூடிய பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது.

### 2.3.2 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வாரச் சந்தை குத்தகைக்கு விடல்

(i) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் 177 விதியின் பிரகாரம் பன்னேகமுவ மற்றும் தெபரவெவ வாராந்த சந்தைகள் மீளாய்வாண்டிற்காக கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் இவ் வாரச் சந்தைகளுக்கு கேள்வி கோரி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டால் குத்தகையாளர்களுக்காக 22 சதவீத தரகுப் பணமாக 2014 ஆம் ஆண்டின் போது செலுத்திய ரூபா 709,027 தொகை மற்றும் 2015 ஆம் ஆண்டின் போது செலுத்திய ரூபா 875,309 தொகையையும் சேமிப்பதற்கு சபைக்கு முடியுமாக இருந்திருக்குமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடை வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) சபையால் 10 இடங்களில் அமைந்துள்ள 258 கடைகளுக்காக புதிய மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 2007 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ii) தெபரவெவ பொது சந்தைக்கு முன்னால் உள்ள கடையொன்றின் குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 109,868 ஆன நிலுவை தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வீட்டு வாடகை

சபைக்குச் சொந்தமான வீட்டிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 91,011 தொகை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 510,672 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 7,933,910 தொகையுமாக கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

2015 வருடாந்த பாதீட்டு முன்மொழிவுகள் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசித்திருந்த 26 வீதிகளில் 2 வீதிகள் மாத்திரம் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 24 வீதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நிதிப் பிரமாணம் 780(1) இன் பிரகாரம் அரசின் வேலைகள் மற்றும் சேவைகள் என்பவற்றையும் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்ற வேண்டியிருந்த போதிலும், சபையால் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண செயற்பாடுகளுக்காக சபையின் டிபர் வண்டி மற்றும் பெக்கோ இயந்திரம் என்பன பயன்படுத்தாமல் வாடகை அடிப்படையில் அவ்வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை பெற்றுக்கொண்டமையால் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்திலிருந்து ரூபா 1,376,375 ஆன செலவினத்தை செலவிட நேர்ந்தது.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) காற்றுச்சீராக்கி இயந்திரம் மற்றும் CCTV கெமறா முறைமையொன்றை கொள்வனவு செய்தல்**

காற்றுச்சீராக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,403,850 தொகையும் CCTV கெமறா முறைமையொன்றை கொள்வனவு செய்வதற்கு ரூபா 148,650 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றின் சேவை வழங்கல் தொடர்பாக 1987 இன் பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 173 பிரிவின் பிரகாரம் எழுத்துமூல உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விலை கோரலுக்கு உரித்தற்ற வகையான காற்றுச்சீராக்கி இயந்திரமொன்று வழங்கி பொருத்தப்பட்டிருந்தது.

**(ஆ) LE-7462 ஆம் இலக்க கெப் வண்டிக்கு புதிய என்ஜினொன்றைப் பொருத்துதல்**

1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக்கோவையின் 177 விதிக்கு இணங்காமல் விலை கோரல் மேற்கொள்ளாமல் வண்டியின் பதிவுத் தகவல்களை வழங்கி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ரூபா 330,000 செலவில் புதிய என்ஜினொன்று பொருத்தப்பட்டிருந்தது.

**(இ) தென் மாகாண அபிவிருத்தி திட்டம்**

2014 ஆம் ஆண்டிற்கான தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி பாடசாலைகளுக்கு உபகரணங்களை வழங்குவதற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 50,000 தொகையான உறுப்பினர் நிதிஏற்பாடு குறித்த

முன்மொழிவிற்கு பயன்படுத்தப்படாமல் முன்பள்ளி பாடசாலை மாணவர்களின் நிழற்படங்களை எடுப்பதற்கு ரூபா 38,125 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனைத்து உபபாகங்களுடன் 10 தொங்கும் விளக்குகளை வழங்கி பொருத்துவதற்கு ஒரு அலகிற்கு ரூபா 2,110 வீதம் ரூபா 21,100 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அலகொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த விலை விபரங்களின் பிரகாரம் CFL மின்குமிழ்கள் வழங்கி பொருத்தப்பட வேண்டிய போதிலும் சாதாரண மின்குமிழ்கள் வழங்கி பொருத்தப்பட்டிருந்தன.

(ஆ) திஸ்ஸமஹாராம பொது நூலகத்தினதும் திஸ்ஸமஹாராம ஆயர்வேத கட்டிடத்தின் மின்சார முறைமையினை அமைத்தலும்

தொடர்புடைய இரண்டு கட்டிடங்களின் மின்சார முறைமைக்காக ஆலோசனையின் பிரகாரம் உபபாகங்களுடன் முறையே 06 மற்றும் 08 தொங்கும் விளக்குகளை வழங்கி பொருத்துவதற்காக ஒரு அலகிற்கு ரூபா 2,110 வீதம் முறையே ரூபா 12,660 தொகை மற்றும் ரூபா 16,880 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அலகொன்றுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த விலை விபரங்களின் பிரகாரம் CFL மின்குமிழ்கள் வழங்கி பொருத்தப்பட வேண்டிய போதிலும் சாதாரண மின்குமிழ்கள் வழங்கி பொருத்தப்பட்டிருந்தன.

**3.2 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 மே 05 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியில் உள்ளடக்கப்படாத செயற்பாடுகளுக்காக பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 திசெம்பர் 26 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற ரூபா 1,000,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஏப்ரல் 28 ஆந் திகதிய 1/2015 ஆம் இலக்க பொது நிர்வாக செயலாளரின் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பந்தியுடன் இணங்காமல் பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கிடைக்கப்பெற்ற நிதியைப் பயன்படுத்தி டயர்கள் கொள்வனவு செய்வதற்கும் வாகனங்களைத் திருத்தியமைப்பதற்கும் ரூபா 432,410 செலவிடப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 21 செலவின விடயங்களுக்காக ரூபா 649,000 ஆன ஏற்பாடுகள் முழுமையாக சேமிப்பிக்கப்பட்டும் இன்னுமொரு செலவின விடயமொன்றில் எல்லையை விஞ்சி ரூபா 2,677,493 ஆன செலவினங்களும் 02 வருமான விடயங்களில் அடையப் பெறாத ரூபா 19,219,976 தொகையான இலக்கும் காணப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்துதல்**

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

நீண்டகாலமாக விளைவற்றுக் காணப்படும் 2 ஆடைகள் தைக்கும் உபகரணங்கள், மோட்டார் படகுகள், உடற்பயிற்சி உபகரணங்கள், உள்ளக ரீதியில் தொடர்புபடுத்தும் சிறுகற்கள் உற்பத்தி செய்யும் இயந்திரம் உட்பட உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல்**

2015 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட 176 பொருள் வகைகளுக்குரிய 590 பொருள் அலகுகளின் பற்றாக்குறை தொடர்பாக 2016 மே 17 ஆந் தகதி வரையிலும் 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 204 விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டுவன பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த அங்கலவை மீளப் பெற்றுக்கொள்வதற்கு 2016 மே 17 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 10,958,799 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,435,317 ஆன மீதிகள் முன்னைய ஆண்டுகளுக்குரித்தாக இருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) சொத்தக்கள் முகாமைத்துவம்